# இஸ்லாமியக் கலாச்சாலரத்தில் பரஸ்பர ஒத்துழைப்பு

இஸ்லாம் மிகவும் முக்கியமான சட்டங்களை வகுத்துத்தந்துள்ளது, இதன் மூலம் முஸ்லிம்களிடையே சமூக நீதி நிலைநாட்டுகின்றது. அத்துடன் பரஸ்பர அன்பு, சகோதரத்துவம், கருணை மனப்பான்மை, ஒத்துழைப்பு மற்றும் மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் மனப்பான்மையை உண் டாக்குகின்றது. முஸ்லிம்களிடையே பரஸ்பர சமூக ஒத்துழைப்பினைச் செயல் வடிவில் நிலைநாட்டுவதில் செல்வத்தின் பங்கு மிகவும் முக்கிய மானதாகும். இஸ்லாம் செல்வ செழிப்புக்கு எதிரானதுமல்ல, அச்செல் வம் அனுமதிக்கப்பட்ட ஹலாலான வழிகளில் சம்பாதிக்கப்பட்டு அதற் கான அல்லாஹ்வின் பங்கு எனப்படும் ஜ்ஸகாத் கொடுக்கப்படுவதனால் செல்வந்தர்களின் செல்வத்தை குறைத்துவிடுவதுமில்லை.

இஸ்லாத்தில் ஜ்ஸகாத் மற்றும் ஸதஃகாவோடு தொடர்புள்ள பெருமளவி லான சட்டங்களும் விதிமுறைகளும் உள்ளன. இவையனைத்தும் முஸ்லிம் களிடையே அன்பு, பாசம் மற்றும் ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தும் உணர்வுப்பூர்வமான வழிகளாகவே செயல்படுகின்றன.

ஜ்ஸகாத் மற்றும் ஸதஃகா ஒரு மனிதன் தன்னுடைய சொத்தைத் தூய் மையானதாக ஆக்கவும், தன்னுடைய முஸ்லிம் சகோதரருக்கு உதவிசெய்து, கஷ்டங்களை எதிர்கொள்ளும் நிலையில் அவருடன் ஒத்துழைத்து மற்றும் அவர்களுடைய மனதில் மகிழ்ச்சியினை உண்டாக்கும் பரஸ்பர உணர்வுடன் தான் ஒரு முஸ்லிம் அதனை அளிக்கின்றான். இதன் காரணமாக, செல்வந் தர்கள் மற்றும் ஏழைகளுக்கிடையே அன்பு மனப்பான்மை வளர்வதோடு, செல்வந்தர்கள் மற்றும் ஏழைகளுக்கிடையே அன்பு மனப்பான்மை மேம் பட்டு வெறுப்பு மற்றும் காழ்ப்புணர்ச்சி போன்ற நோய்கள் குறைந்தும் விடுகின்றன.

இவ்விதமானச் சட்டங்களுள் கஃப்ஃபரா எனும் பரிகாரம் செய்யும் சட்ட மும் ஒன்று. சில குற்றங்களுக்கான பரிகாரங்கள் பணத்தின் மூலமாக நிறை வேற்றப்படுகின்றன. ஊதாரணமாக, சத்தியம் செய்தல் மற்றும் ஸ்ஜிஹார் ஆகியவற்றிற்கான கஃப்ஃபாரா. சில வகையான குற்றங்களுக்கு கஃப்ஃரா உணவளிப்பதன் மூலம் நிறைவேற்றப்படும், இதன் காரணமாகவும் ஒரு முஸ்லிம்கள் மற்றும் அவருடைய சகோதரர்களான மற்ற முஸ்லிம்களி டையே அன்பு மற்றும் சகோதரத்துவம் உருவாகின்றது. இதேபோன்று, மற்ற விதிமுறைகளின்படி வலீமா, ஹதிய்யா, ஹிபா மற்றும் வஸிய்யத் (உயில்) ஆகியவற்றின் சட்டங்களும் அமைகின்றன. இந்தச் சட்டங்களெல் லாம் மனிதர்களுக்கிடைய காணப்படும் பெருமை மனப்பான்மை, கர்வம் ஆகியவற்றை முடிவுக்குக் கொண்டுவருவதோடு மனங்களிலிருந்து வெறுப்

www.uzaifalahi.com

புணர்ச்சிகளை நிக்கிவிடுகின்றன. இவை நேர்மை, இறையச்சத்தின் அடிப் படையில் பரஸ்பர ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றன.

இச்சட்டங்களில் அனாதைகள் மற்றும் விதவைகளைப் பராமரிப்பதும் அடங்கும். தந்தையின் மரணத்திற்குப்பின் அனாதைகளைப் பராமரிப்பது முஸ்லிம் சமதாயத்தினர் மற்றும் ஆட்சியாளர்கள்மீது கடமையானதாகவே ஆகிவிடுகிறது. சமுதாயத்தினர் இந்த அனாதைகளைப் பராமரித்து ஆதர வளிப்பார்களேயானால் அவர்கள் இந்த சமுதாயத்துடன் அன்பு, நன்றி மற வாமையுடன் இருப்பார்கள் மற்றும் அந்த சமுதாயத்தின் பாதுகாப்பு மற் றும் நலனுக்காக தன்னுடைய உயிரையும் தியாகம் செய்யவும் தயாராக இருப்பார்கள். இதுபோன்றே, விதவைகளையும் நல்ல முறையில் பாது காப்பளித்து அவர்களுடைய நலனைப்பேணிப் பராமரித்தால் அவர்களும் சமுதாயத்தினருடன் அன்பு மனப்பான்மையுடன் நடந்துகொண்டு தமக்கு ஆதரவாக இருந்த சமுதாயத்திற்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்பார் கள், மேலும், தீமையான, பாவச்செயல்களிலிருந்தும் விலகி இருப்பார் கள்.

இதனைத்தவிர, வக்ஃபு, கடன், ஒன்றை இரவலாகக் கொடுத்து உதவும் பண்பு அகியவற்றைப்பற்றிய எண்ணற்ற விதிகளும் உள்ளன. இவை யனைத்தும் முஸ்லிம் சமுதாயத்தினர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பினை வலுப்படுத்தும் வகையில் உள்ளன. உதாரணமாக, ஒருவர் ஒரு பள்ளிவாசல், பள்ளிக்கூடம் அல்லது மருத்துவமனை கட்டுவதற்காக நிலத்தை வக்ஃபு செய்தால் அல்லது தன்னுடைய முஸ்லிம் சகோதரர்களுக்காக வக்ஃபு செய் தால், அவர் தன்னுடைய சமுதாயத்துடனான அன்பின் அடிப்படையில்தான் செய்கின்றார் என்பது தெளிவாகின்றது. மக்களும் அவரை நேசிக்கின்றனர் மற்றும் மக்கள் நலனுக்கான காரியங்களைச்செய்யும்போது அவரை நினைவு கூர்கின்றனர். இவ்வாறே, தன்னுடைய தேவையுள்ள ஒரு சகோதரருக்குக் கடன் கொடுத்து உதவினால், அவர் அவருடைய ஒரு உலக ரீதியான பிரச் சினையினை தீர்ப்பதில் உதவியுள்ளார். இதுபோன்றே, ஒரு தேவையுள்ள சகோதரருக்கு ஒரு பொருள் அல்லது சாதனத்தைக்கொடுத்து உதவினால், அவரும் அதனைப் பயன்படுத்திக்கொண்டு அதனைத் திருப்பிக்கொடுக்கும் நிலையில் இந்த சகோதரர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் மற்ற வர்களுக்கு முன்னுரிமையும் உதவியும் அளிப்பது மேம்படுகின்றது.

### சுமூகத்தின் பாதுகாப்பு மற்றும் அது தூய்மையானதாக அமைத்துக்கொள்வதற்கு ஷரீஅத் சட்டங்களுக்கு முக்கியத்துமளித்துக் கடைபிடிக்கவேண்டும்

இஸ்லாத்தில் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் தூய்மையின் அடிப்படை யிலான உறவுகளுக்கு முக்கியத்தவமளித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இது



www.uzairaahi.com

கீழ்க்காணும் சமூக ரீதியான மற்றும் ஒழுக்கப்பண்புகளை நெறிப்படுத்தும் சட்டங்களின் மூலம் மிகவும் தெளிவுடன் அறிந்துகொள்ள முடிகின்றது:

## கொடுக்கல் வாங்கல்கள்

இஸ்லாம் வியாபாரத்தை ஹலாலானதாக ஆக்கி, அதற்கான சட்டங்கள், நிபந்தனைகள், அம்சங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட, தடுக்கப்பட்ட (ஹராமான) முறைகளின் விவரங்களையும் தெளிவுபடுத்தியுள்ளது. எந்த விஷயங்களில் சமுதாயத்தினர்களுடைய தேவைகள் உள்ளனவோ, எதில் அவர்களுக்கு நன்மையான விஷயங்கள் இருந்தனவோ அவற்றையெல்லாம் ஹலாலானதாக ஆக்கி, நிர்ப்பந்தம் மற்றும் கட்டாயத்துக்கு ஆளாக்கி தவறான முறைகளில் மக்களுடைய பொருட்களை அபகரிக்கும் முறைகளை ஹராமானதாகவும் ஆக்கியுள்ளது. இவ்வகையில், இஸ்லாம் வட்டியை ஹராமானதாக ஆக்கித் தடுத்துள்ளது, ஏனெனில், இதில் மிகவும் அதிகமான நஷ்டம் மற்றும் அபாயம் உள்ளது. இது மக்களிடையே விரோதத்தையும் பகைமையையும் ஏற்படுத்துகின்றது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பின் பண்பினை முற்றிலும் முடிவுக்குக் கொண்டுவருகின்றது. இதன் காரணமாக, சமுதாயத்தில் ஒரு வர்க்கம் உருவெடுக்கின்றது, அது தாம் எவ்வித உழைப்பினையும் மேற்கொள்ளாமலேயே தங்களுடைய பொருளை மற்றவர்களின் உழைப்பு மற்றும் அவர்களைக்கொண்டே பெருக்கிக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாம் ஒருவர் உழைத்து சம்பாதிப்பதையே விரும்புகின்றது மற்றும் இதனை வெகுவாகவே ஊக்குவிக்கவும் செய்கின்றது, ஏனெனில், உலக ரீதியான கட்டமைப்பு சமுதாயத்தின் செழிப்பு மற்றும் மன நிறைவுக்கான ஆதாரமாகும். இஸ்லாம் தேவையுள்ளவர்களுக்கு அழகிய கடன் (**ஃகர்ஜ்து ஹசன்**) கொடுத்து உதவுவதை வலியுறுத்துகின்றது மற்றும் கொடுக்கல் வாங்கல்களை எழுதிவைத்து சாட்சிகளை வைத்துக்கொள்வதன் மூலம் அளிக்கப்படும் கடன்களைப் பாதுகாத்தும் உள்ளது. கடன் பெற்றவர் முடிந்த அளவிற்கு சீக்கிரமே அதனை அடைத்துவிட முயற்சிக்கவேண்டும் என்றும் வலியுறுத்ததுகின்றது, வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஏற்ப முறைாக நடந்துகொள்வது ஆகியவற்றிற்கான கட்டளைகளையிடுகின்றது. இவ்வாறே, இஸ்லாம் உண்மையான சாட்சி அளிப்பது மற்றும் சாட்சிகளை மறைக்கக்கூடாது என்று அதனைக் கட்டாயமானதாக ஆக்கியுள்ளது. இஸ்லாம் பொய் கூறுவது, அளவைகளில் ஏமாற்று வேலைகளைச்செய்வதை ஹராமானதாக ஆக்கியுள்ளதோடு, நேர்மையான முறையிலும் நியாயமாகவும் நடந்துகொள்ளும்படி கட்டளையிடுகின்றது. இவற்றிற்கெல்லாம் ஊக்கமளித்து, இவையனைத்தும் ஒரு ஆட்சியதிகாரத்தின் அஸ்திவாரங்களாக அமைகின்றன என்று வலியுறுத்திக்கூறுகின்றது. இதன்

www.uzairfalahi.com

காரணமாக, மக்களுக்குச் சுகமான வாழ்க்கையும் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு அனைத்து வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன என்ற மனநிறைவும் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

## தண்டனைகள் மற்றும் பழிவாங்கும் முறைகள்

இஸ்லாம் பூமியில் குழப்பங்களை விளைவிப்பதை ஹராமானதாகத் தடுத்துள்ளது. உதாரணமாக, இரத்தம் சிந்துதல், திருடுதல், அபகரித்தல், மானபங்கப்படுத்துதல், கற்புடைய பெண்கள்மீது அவதூறு சொல்லுதல், பழி சுமத்துதல் அல்லது கொள்ளையடித்தல் ஆகியன. இஸ்லாமியத் தண்டனைகளின் நோக்கம் குழப்பங்கள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுத்தல் மற்றும் சமூகங்களைப் பாதுகாப்பதேயாகும். ஆகவே, திருட்டுக்கான தண்டனையாக திருடியவருடைய கைகளை வெட்டுதல், விபச்சாரம் செய்பவர் திருமணமாகாதவராக இருந்தால் நூறு கசையடிகளும் திருமணமானவராக இருந்தால் கல்லெறிந்து மரண தண்டனை நிறைவேற்றுவது, வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலை செய்ததற்கான தண்டனை உயிருக்கு பதில் உயிர் என்ற அடிப்படையில் பழிவாங்கும் உரிமை என்றும், கொலை செய்யப்பட்டவருடைய குடும்பத்தினர் தியத் எனப்படும் இழப்பீட்டுத் தொகைக்கு சம்மதித்துவிடுவார்களேயானால் அந்த மனிதர் அத்தொகை செலுத்தப்பட்டுவிட்டபின் விடுதலை பெற்றுவிடுவார் என்ற வகையில் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தண்டனைகள் முழுமையாக புலனாய்வு மற்றும் விசாரணை செய்யப்பட்டபின் மட்டுமே நிறைவேற்றப்படும் மற்றும் அதன் அடிப்படை விதி என்னவென்றால் சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகள் நிறைவேற்றப்படுவதில்லை. நீதிபதி ஒரு குற்றவாளிக்கு மன்னிப்பு அளிப்பதில் தவறு நிகழ்ந்துவிடுவது, அந்தக் குற்றவாளிக்கான தண்டைனையை நிர்ணயிப்பதில் தவறு செய்துவிடுவதைவிட ஒரு வகையில் நல்லததுதான். தண்டனைகளை நிறைவேற்றுவது ஒரு முஸ்லிம் ஆட்சியாளருடைய பொறுப்பாகும், அல்லது அவருடைய உதவியாளரான ஒரு அதிகாரி இதனை நிறைவேற்றலாம். பொதுமக்கள் தண்டனைகளை நிறைவேறுவதற்கான உரிமையைப் பெறுவதில்லை. எவரும் தாமாகவே முன்வந்து எந்த ஒரு தண்டனையையும் நிறைவேற்றிவிட்டால், அதற்கான தண்டனையாக குற்றவியல் துறையின் தண்டனை வழங்கப்படும். ஏனெனில், இவர் ஆட்சியாளருடைய அதிகாரத்தை வலுக்கட்டாயமாக அபகரித்துள்ளார், இதன் காரணமாக, நாட்டில் சட்டமீறல் குற்றங்கள் பரவலாம், குற்றவியல் பிரிவினரால் வழங்கப்படும் தண்டனைகளை நிறைவேற்றுவது ஆட்சியாளரின் அதிகாரத்தில் மட்டுமே இருக்கும்.

www.uzairfalahi.com

குற்றவியல் தண்டனைகள் பொதுமக்கள் அதனைப் பார்த்து படிப்பினை பெறவேண்டும் என்பதற்காக பொதுவான ஒரு இடத்தில் திறந்தவெளியில் மட்டுமே நிறைவேற்றப்படும். இவ்விதக் குற்றங்களைப் புரிவதற்கு வாய்ப்புக்களுக்காகக் காத்திருப்பவர்கள் இவ்விதக் காட்சிகளைக்கண்டு நடுக்கம் கொள்வார்கள். நாம் அனைவருக்கும் இறைத்தூதர் ﷺ அவர் களுடைய வாழ்க்கையில் ஒரு சிறந்த முன்மாதிரி மற்றும் அறிவுரைகள் இருக்கின்றன. அவர்களுடைய ﷺ வாழ்க்கையில் இவ்வாறான தண்டனை கள் ஆறு முறை மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏனெனில், மக்களு டைய மனங்கள் மற்றும் அவர்களுடைய ஒழுக்க முறைகள் இஸ்லாமியப் பண்புகள் மற்றும் போதனைகளால் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.

**சமூகப் பண்புகள்**

இஸ்லாம் முஸ்லிம்களுடைய சமூக அமைப்பின் அடிப்படையான, பாது காப்புக்கு இன்றியமையாத, அவர்களுடைய பரஸ்பர ஒருமைப்பாடு மற் றும் ஒத்துழைப்பினை அவர்கள் வளர்த்துக்கொள்ளும் வகையிலான எண் ணற்ற பண்புகள் மற்றும் ஒழுக்க முறைகளைப் போதித்துள்ளது. உதாரண மாக, முஸ்லிம்கள் ஒருவர் மற்றவர்களைப்பார்த்து சலாம் சொல்லும் முறை, உறவுகளைப் பேணிபாதுகாப்பது, பெற்றோர்களுடன் நல்ல முறை யில் பணிவுடன் நடந்துகொள்வது, சகோதரத்துவம். ஒருவர் மற்றவர்களு டனான சந்திப்புகள், மக்களிடையே நலனையும் சமானதான முறைகளை யும் நிலைநாட்டுவது, தன்னலமற்ற பணிவு, மற்ற முஸ்லிம்களுக்கு நல்லுப தேசம் மற்றும் அறிவுரை வழங்குதல் அகியன.

இஸ்லாம் சமுதாயங்களுக்கிடையே வேற்றுமை, வேறுபாடு மற்றும் வெறுப்புணர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தும் அனைத்து வழக்கங்களையும் ஒழுக்கக்கேடான வழிமுறைகளுக்கு வழிவகுக்கும் அனைத்தையும் ஹரா மானதாக ஆக்கியுள்ளது. உதாரணமாக, புறம் பேசுதல், கோள்மூட்டித் திரி தல், உறவுகளை முறித்துக்கொள்ளுதல், பெற்றோர்களுக்கு மாறு செய்தல், மற்றவர்கள்மீது அட்டூழியங்களைப் புரிதல், ஏமாற்றுவேலைகள், பொய் பேசுதல், அமானிதங்களை வீணழித்தல் பொய்யான சாட்சிகளைக் கூறு தல் ஆகியன.

* * *

www.uzairfalahi.com